வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | சித்திரக்கலை I | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

**பகுதி - I**

➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.

➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**பகுதி - II**

➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.

➢ **அ பகுதியிலிருந்து இரு வினாவும், ஆ, இ பகுதிகளில் இருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |


## பகுதி - I

❖ ***வினா இல 1 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகச் சரியான விடையை A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவு செய்க.***


A


B


C


D


E

1) A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இவ்வோவியத்தினால், சோலியஸ் மென்டிஸ்
   1. விகாரைச் சுவரோவியக் கலையை மாற்றத்திற்குட்படுத்தியுள்ளார்.
   2. புத்தரின் இலங்கைக்கான விஜயம் பற்றியதொரு செய்தியை, சரியான ஒழுங்கமைப்புடன் வெளிப்படுத்துகிறார்.
   3. புத்த பகவான் மகியங்கணைக்கு விஜயம் செய்து பேய்களை அடக்கிய விதத்தை, பாவம் நிறைந்த உருவங்களினால் வெளிப்படுத்துகிறார்.
   4. செயற்றிறான மனித உருவத்தையும் பல்வேறு நடத்தைக் கோலங்களையும் பற்றிய பரந்ததோர் அறிவைக் கொண்டவராகக் காட்டப்பட்டுள்ளார்.
   5. பேய்களின் அதிக பயத்தையும் புத்தபகவானின் அமைதியையும் மிகப் பக்குவமாக எடுத்துக் காட்டுகிறார். (…………..)

2) B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள "சீததா டி சேரம்"எனும் பிரதிமை ஓவியத்தை வரைந்த கலைஞர்
   1. ரியூடர் ராஜபக்ஷ 2. ஏ.சீ.ஜீ. எஸ். அமரசேகர 3. ஹரிப் பிரிஸ்
   4. ஜே. டீ. ஏ. பெரேரா 5. ஜஸ்டின் தரணியகல (…………..)

3) C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள 'மூன்று பெண்கள்' என்ற ஓவியமானது,
1. பெண்களைப் பற்றியதாக வரையப்பட்ட கவிதைப் பாங்கான கட்புல வெளிப்பாடாகும்.
2. பெண்கள் மூவரின் உருவங்கள் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட அலங்காரமான படைப்பாகும்.
3. யதார்த்தமும் கற்பனையும் ஒன்றிணைக்கப்பட்ட ஜெமினிறோயின் படைப்பாகும்.
4. சமய வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும் பெண்கள் மூவர் காட்டப்பட்டுள்ள தாகூரின் நிர்மாணிப்பாகும்.
செயலிழந்த நிலையில் காணப்படும் பெண்களைக்காட்டும் அமிர்தா ஷர்கிலின் ஓவியமாகும்.
(…………..)

4) எழுத்து D யினால் காட்டப்படும் உறக்கம்
1. போல்கொகானின் ஓவியமாகும்.
2. கிளாட் மொனேயின் சித்திரமாகும்
3. வின்சன்ட் வான்கோவின் சித்திரமாகும்
4. சர்வதோர் டாலியின் சித்திரமாகும்
5. ஒகஸ்ட் றெனோவின் சித்திரமாகும் (…………..)

5) எழுத்து E வினால் காட்டப்படும் ஜெஸ்டின் தெரனியாகலவினால் வரையப்பட்ட ஓவியம்
1. டேசி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
2. கமிலி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
3. நாயகி எனப் பெயரிடப்பட்டுள்ளது.
4. எலீன் எனப் பெயரிடப்பட்டுள்ளது.
5. கண்ணாடி முன் பெண் எனப் பெயரிடப்பட்டுள்ளது. (…………..)

➢ **06 தொடக்கம் 10 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையினை தெரிவுசெய்க.**

6) காந்தார மதுராக் கலை மரபுகள், ஒரே அரசர் காலப்பகுதியில் உருவான கலைகள், ஆயினும் அந்தக் கலை மரபுகளில், புத்தர்சிலை அமைப்புகள் ஒன்றுகொன்று வேறுபட்டிருப்பது.
1. இந்தும் தேரவாத பௌத்த இலச்சணமாயிருப்பதால்.
2. தேசிய, சுதேசிய கலை மரபுகள் கொண்டதாயிருப்பதால்.
3. சுதேசியமும், மகாயான கலை மரபுகள் கொண்டதாயிருப்பதால்.
4. கிரேக்கமும், சுதேசிய கலை மரபையும் பயன்படுத்தியுள்ளமையால்.
5. கிரேக்க, எகிப்திய கலைத்தழுவல்களைக் கொண்டவையாயிருப்பதால் (…………..)

7) 43 குழுவின் விசேட தன்மையானது,
1. யதார்த்தவாத கலைப்பாணியின் இயல்பை பின்பற்றியிருத்தல்.
2. பலவகை பாணிகளுடனான நவீன வாதக் சித்திரக்கலையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தல்.
3. ஆரம்ப காலத்தில் இருந்த மேன்மையான சித்திரக் கலைப் பாணியின் தழுவலைக் கொண்டிருத்தல்.
4. ஐரோப்பிய இலட்சியவாத, கலைப்பாணியினை மட்டும் அடிப்படையாக கொண்டிருத்தல்.
5. மரபுரீதியான சித்திரக்கலையின் சட்டதிட்டங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட கலைப்பாணி யின் அடிப்படையாக கொண்டிருத்தல். (…………..)

8) எட்டு சிங்க உருவங்கள் பல்வேறு மெய்நிலைகளில் வரையைப்பட்டுள்ள ஓவியம் காணப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட கால குகையானது,
1. லாஸ்கோ குகை
2. அல்டாமீரா குகை
3. பொண்டிக கோவே குகை
4. ஷீவெ குகை
5. கோகுல் குகை (…………..)

9) எகிப்திய நாகரிகத்திற்குரிய 'லியன்னா' எனப்படும் சிலை,
1. மரபு ரீதியானதும் யதார்த்தமானதுமான பண்புகளைக் கொண்டதாகும்.
2. ஏதேனுமொன்று தொடர்பில் மிக அவதானத்துடன் இருக்கும் ஒருவர் சிலையாக வடிக்கப்பட்டுள்ளமையாகும்.
3. கீழ்ப்படிவான பணியாளன் ஒருவனைச் சிலையாக வடிப்பதற்கு எடுக்கப்பட்டதொரு முயற்சியாகும்.
4. ஏதேனுமொன்றைக் கேட்டு எழுதத் தயாராய் இருக்கும் ஒருவர் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
5. ஆவிகளின் உலகில் தன் தலைவருக்குப் பணியாற்ற அர்ப்பணிப்புடனிருக்கும் ஒருவர் சிலையாக வடிக்கப்பட்டுள்ளமையாகும். (…………..)

10) பின்மனப்பதிவு வாத படைப்பான தெய்வங்களில் தினம் என்ற ஓவியத்தின் படைப்பாளி
1. லாஸ்கோ 2. கேகான் 3. பிக்காசோ 4. மேரி கசற் 5. டெகாஸ்
(…………..)


➢ ***11 தொடக்கம் 15 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையை பின்வரும் K, L, M, N, O ஆகிய சித்திரங்களிருந்து தெரிவு செய்க.***




K



L



M



N



O

11) இவ் ஓவியங்களுள் வெசந்தர ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கும் பகுதிகள் யாவை?

1. K, L  2. K, O  3. L, M  4. M, N  5. N, O

(…………..)

12) இவ் ஓவியங்களுள் தாழ்நில விகாரை மரபு ஓவியங்கலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஓவியப் பகுதிகள் எவை?

1. K, L  2. K, O  3. L, M  4. M, N  5. N, O

(…………..)

13) இவ் ஓவியங்களுள் குகைக் கோயிலுடன் தொடர்புடைய ஓவியப் பகுதிகள் எவை?

1. K, L  2. L, M  3. N, O  4. L, N  5. M, O

(…………..)

14) இவ் ஓவியங்களுள் டெம்பிட்ட விகாரையொன்றின் ஓவியப் பகுதி எது?

1. K  2. L  3. M  4. N  5. O

(…………..)

15) இவ் ஓவியங்களுள் மலையக விகாரை மரபு ஓவியங்கலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஓவியப் பகுதிகள் எவை?

1. K, L, N  2. K, L, O  3. K,N,O  4. L, M, N  5. L, N, O

(…………..)

agaram.lk

➢ **16 தொடக்கம் 20 ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

16) பாவனைப் பொருட்களை திட்டமிடும் பொழுது,

1. பாவனைத்தேவைக்கு ஏற்றவகையில் பொருத்தமாக நிர்மாணித்தல் வேண்டும்.
2. ஊடகத்தின் இயல்புகளுக்கு பொருத்தமான வகையில் நிர்மாணித்தல் வேண்டும்.
3. பாவனையாளர்களின் மனத்தைக் கவரும் தன்மையில் நிர்மாணித்தல் வேண்டும்.
4. சந்தைக்குக் கேள்விக்கேற்ப நிர்மாணிக்க வேண்டும்.
5. நிர்மாணிப்பின் இலகுவான முறையை கவனத்தில் கொண்டு திட்டமிடல் வேண்டும்.

(…………..)

17) (லேபல்) பெயர்ச்சுட்டி ஒன்றை நிர்மாணிக்கும் போது முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது,

1. உருவத்தையும் வர்ணத்தையும் குறியீட்டுத் தன்மையில் பயன்படுத்திக் கொள்ளல்.
2. தொனிப்பொருளுக்கு ஏற்ற வகையில் குறுகிய சொற்களைக் கொண்ட எழுத்துக்களைப் பயன்படுத்திக் கொள்ளல்.
3. ஆக்கச்சிறப்பும், விளக்கமும் சிறந்த பூரணப்பாட்டையும் கொண்டதாக நிர்மாணித்தல்.
4. பெயர்ச்சுட்டி (Label)யை எழுத்துக்கள் மூலம் வாசித்து விளங்கிக் கொள்ள திட்டமிடல்.
5. தொனிப்பொருளுக்கு பொருத்தமான வடிவத்தையும் எழுத்தையும் மனங்கவர் தன்மையில் நிர்மாணித்தல்.

(…………..)

18) பல்வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்தி உயர்புடைப்பு ஆக்கத்தை நிர்மாணிக்கும் போது கவனத்தில் கொள்ளவேண்டியது,

1. செதுக்கலின் பொருட்டு தெரிவு செய்யப்படும் தளத்தின், இயல்பு பற்றி.
2. அழகியல் தன்மைக்குரிய காரணங்களைப் பற்றி கூடிய கவனம் செலுத்துதல்.
3. நிர்மாணிப்பின் பொழுது சரியான முறையில் உபகரணங்களை பயன்படுத்திக் கொள்ளல்.
4. பொருத்தமான நுட்ப முறையை பயன்படுத்தி பூர்த்தி செய்து வர்ணம் தீட்டி நிறைவு செய்தல்.
5. தெரிவு செய்யப்பட்ட தலைப்பிற்கும் ஊடகத்திற்கும் பொருத்தமான வகையில் கருத்துள்ளதாக வடிவமைப்புகளை கட்டி எழுப்புதல். (…………..)

19) பொருட்கூட்டம் வரைதல் பயிற்சி பெறுதலின் முக்கிய எதிர்பார்ப்பானது,

1. அவதானித்தவற்றை அவ்வாறே வரைவதற்கு பழக்குதல்.
2. அடிப்படைக் கோட்பாடுகளையும் புற இயல்புகளையும் சித்தரித்தல் பற்றிய விளக்கத்தை பெற்றுக் கொள்ளல்.
3. ஒவ்வொரு பொருட்களின் புற இயல்புகளை சித்தரித்தல் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.
4. பொருட்களின் பரிமாணம், அவற்றின் தன்மை ஒன்றுக்கொன்று வேறுபடும் விதத்தை இனங்கண்டு கொள்ளல்.
5. ஒளி நிழல்பாங்கு பொருட்களின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும் விதத்தை கற்றுக் கொள்ளல். (…………..)

20) கட்புலக் கலையின் அடிப்படை தத்துவம் மிகச் சரியாக காணப்படுகின்ற வரியானது?

1. இரேகை, சமநிலை, லயம், இழையமைப்பு
2. வர்ணம், மாதிரி, முப்பரிமாணம், இரேகை
3. வடிவம்,சமநிலை, இணைப்பு, இடைவெளி
4. சமநிலை, லயம், தூரதரிசனம் முப்பரிமான இயல்பு
5. மாதிரி, இழையமைப்பு வடிவம், வர்ணம் (…………..)

➢ **வினா இலக்கம் 26 தொடக்கம் 30 வரை கேற்கப்பட்டுள்ள ஒவ்வொரு வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையை கீழ்த் தரப்பட்ட F, G, H, I, J என பெயரிடப்பட்ட சித்திரங்களின் மூலம் தெரிவு செய்க.**



F G H I J

21) F எழுத்தினால் காட்டப்படுவது,

1. அபுசிம்பலில் செதுக்கப்பட்டுள்ள பாரா அரசர்களின் உருவங்களாகும்.
2. அபுசிம்பலில் தேவாலயத்தில் காணப்படும் 2ம் ராம்செஸ் அரசனின் 4 சிலைகளாகும்.
3. 2ம் ராம்செஸ் அரசனால் அபுசிம்பலினால் செதுக்கப்பட்ட 4 தெய்வ வடிவங்களாகும்.
4. பாராவோ மன்னர்களுடைய பராக்கிரமத்தின் பெருமையை எடுத்துக் காட்டுகின்ற 4 சிலை களாகும்.
5. ஏகிப்தின் பழைய ராஜதானிக் காலத்து கலைப்பாணியில் செதுக்கப்பட்ட 4 சிலைகளாகும். (…………..)

22) G எழுத்தினால் காட்டப்படும் சிலை,

1. இயற்கையில் காணப்படும் பெண் வடிவத்தை விகாரப்படுத்தி செய்யப்பட்டுள்ள நிர்மாணி ப்பாகும்.
2. மனித உடலின் அங்கங்களை தத்ரூபமாக சித்தரித்துக் காட்டுவதாகும்.
3. மனித உடலின் மாதிரியை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த வடிவ வெளிப்பாடாகும்.
4. கலைஞனுக்கு, உரித்தான வடிவமைப்புக்களினூடாக பூர்த்தி செய்யப்பட்ட பெண் வடிவமாகும்.
5. பெண்ணுடைய உண்மை வெளிப்பாட்டிற்கு மாறாக எளிமையாக நிர்மாணிக்கப்பட்ட மாதிரி வடிவமைப்பாகும். (…………..)

23) H எழுத்தினால் காட்டப்படும் புத்த சிலை,
1. கடலாதெனிய விகாரையில் சிற்பி கனேஸ்வராச்சாரியால் நிர்மாணிக்கப்பட்டதாகும்.
2. கடலாதெனிய விகாரையில் ஸ்தபதிரியார் சிற்பியால் நிர்மாணிக்கப்பட்டது.
3. இலங்காதிலக விகாரையில் சிற்பி கனேஸ்வராச்சாரியால் செய்யப்பட்டது.
4. இலங்காதிலக விகாரையில் சிற்பி கனேஸ்வராச்சாரியால் செய்யப்பட்டது.
5. கம்பளை காலத்தில் செய்யப்பட்ட புத்தரது மகா ஆளுமையை வெளிக்காட்டும் புத்தர் சிலை.
(…………..)

24) I எழுத்தினால் காட்டப்படும் ஓவியம்,
1. உலோக ஊடகத்தால் செய்யப்பட்ட எளிமையான வடிவமைபுடைய தாய்த் தெய்வச்சிலை.
2. எளிமையான வடிவமைப்பினைக் கொண்டு ரெராகொட்டா ஊடகத்தால் செய்யப்பட்ட தாய்த் தெய்வச் சிலை.
3. எளிமையாக செய்யப்பட்ட கிராமியக் கலை இயல்பைக் கொண்ட தாய்ச் தெய்வச்சிலை.
4. தற்காலச் சிற்பி ஒருவரால் செய்யப்பட்ட அரூப வடிவ நிருமாணிப்பு.
5. அச்சின் உதவியுடன் களிமண்ணால் செய்யப்பட்ட தாய்ச் தெய்வத்தின் அரூப வடிவச் சிலை.
(…………..)

25) J எழுத்தினால் காட்டப்படும் ஓவியம்,
1. அநுராதபுரக் காலத்துக்குரிய தபேகொடினில் தாதுகோபுரத்தில் இருந்து கிடைக்கப் பெற்ற போதிசத்துவர் சிலை.
2. இலங்கையில் கிடைக்கப்பெற்ற அவலோகினேஸ்வரர் சிலைகளில் ஒன்று.
3. லலிதாசன மெய்நிலையில் செய்யப்பட்ட வெண்கல போதிசத்துவர் சிலை.
4. வெண்கல ஊடகத்தில் வார்ப்பு முறையில் செய்யப்பட்ட, வெகெறகலின் கிடைத்த அவலோகி னேஸ்வர சிலை.
5. அநுராதபுரக் காலத்துக்குரிய தங்கத்தால் செய்யப்பட்ட அவலோகினேஸ்வர போதிசத்துவர்.
(…………..)

➢ **26 தொடக்கம் 30 ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

26) நூற்றாண்டின் புகழ்பெற்ற இலங்கைச் சிற்பக் கலைஞரின் புத்தர்பெருமான் ஞானம் பெறுவதற்கு முன் நடாத்திய கடின வாழ்வை சித்தரிக்கும் கலைப்படைப்பு காட்டப்பட்டுள்ளது. இக்கலைஞரின் பெயரைக் குறிப்பிடுக.
1. ஸ்ரான்லி அபயசிங்க
2. திஸ்ஸாரனசிங்க
3. அபயஆரியசிங்க
4 - அய்வன் பீரிஸ்
5 - கணேஸ்வராச்சாரியார்
(…………..)

27) கண்ணால் பார்த்ததும் விளங்கிக் கொள்ளும் கலை ஊடகமாக உருவான கண்டிக்கால ஜாதகத்தை ஓவியங்கள் மக்களிடத்து பக்தியையும் பௌத்த உணர்வையும் தூண்டுவதற்கு முக்கியமான காரணியாக அமைந்தமை அதில் காணப்பட்ட
1. மென் இரேகைப் பயன்பாட்டால் அலங்கரிக்கப்பட்ட வடிவமைப்புகளாகும்.
2. முழிப்பான பிரகாசமான வர்ணப்பயன்பாடாகும்.
3. தொடர்கதை அமைப்பு முறையைப் பின்பற்றி கருப்பொருளைச் சிறப்பாக ஒழுங்கமைப்பு செய்துள்ளமையாகும்.
4. சாஸ்திர ரீதியான சித்திரக்கலைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தாமையாகும்.
5. இருபரிமாணமுறையில் வரையப்பட்டமையாகும் (…………..)


28) நினைவிழந்த பெண்ணை காட்டும் ஓவியம் அஜந்தாவின் எத்தனையாம் குகையில் வரையப் பட்டுள்ளது .
1. முதலாம் குகை
2. இரண்டாம் குகை
3. பதினாறாம் குகை
4- பதினேழாம் குகை
5- பத்தாம் குகை.
(…………..)

29) அரண்மனைத் தோற்றத்தைக் கொண்ட மிக விசாலமான கட்டடக்கலை நிர்மாணிப்புக்களை உரோ மானியர்களால் உருவாக்குவதற்கு முடிந்தமை.
1. புராதன கட்டடக்கலை நுட்பமுறைகளைப் பின்பற்றியமையாலாகும்.
2. அரைவளைவு,கோளவடிவ கூரையமைப்பு முறைகளைப் பயன்படுத்தியமையாலாகும்.
3. சக்கரவர்த்திகளின் வசதியான சுகபோக வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு வகைக் கட்டங்களை நிர்மாணித்ததாலாகும்
4. அரச அனுசரணை கிடைத்துள்ளமையாலாகும்.
5. போர் வெற்றிகளினால் கிடைத்த செல்வத்தினாலாகும். (…………..)

agaram.lk

30) பொலன்னறுவை கல்விகாரையில் உள்ள புத்த சிலையில் அமைந்துள்ள காவி உடையில் காணப்படும் மடிப்புகளை ஒத்த கோட்டு உருவமைப்பைக் கீழே காட்டப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக..

1. 2. 3. 4. 5.



(…………..)

➢ **31 தொடக்கம் 35 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப்பொருத்தமான விடை அதற்கு முன்னாலுள்ள கட்டடக்கலை நிர்மாணிப்புக்களின் உருவப்படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

31) இங்கு காணப்படும் கட்டட நிர்மாணிப்பானது,



1. தூபராம வட்டதாகே ஆகும்.
2. லங்காராம வட்டதாகே ஆகும்.
3. திரியாய வட்டதாகே ஆகும்.
4. அம்பஸ்தல வட்டதாகே ஆகும்.
5. மெதிரிகிரிய வட்டதாகே ஆகும்.

(…………..)

32) தம்பதெனிய காலப்பகுதிக்குரிய இந்த நிர்மாணிப்பானது,



1. கருங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட படிக்கட்டுகளைக் கொண்ட நுழைவாயில் ஆகும்.
2. யாப்பகூவ இடிபாடுகளுடன் தொடர்புடைய நுழைவாயிலாகும்.
3. கற்களாலான செதுக்கல்களைக் கொண்ட கதவுச் சட்டகம் ஆகும்.
4. சோழர்களின் கலைப்பாணிக்கமைய அமைக்கப்பட்ட யாப்பகூவ அரண்மனையின் நுழைவாயில் ஆகும்.
5. யாப்பகூவ தலதா மாளிகைக்கு முன்னால் அமைந்துள்ள நுழைவாயில் ஆகும்.

(…………..)

agaram.lk

33) பஞ்ச பாண்டவ ரதக் கோயில்களுக்குரியத்தான இது,



1. மூன்று அங்கங்களைக் கொண்ட பிரமிட் வடிவக் கோயிலாகும்.
2. மிகச் சிறிய திரௌபதி அம்மன் கோயிலாகும்.
3. தனிக்கல்லினால் செதுக்கப்பட்ட சகாதேவ ரதக் கோயிலாகும்.
4. ஏளிய வடிவில் அமைந்த வீம ரதக் கோயிலாகும்.
5. பிரமிட் வடிவக் கூரையமைப்பைக் கொண்ட தர்மராஜரதக் கோயிலாகும்.

(…………..)

34) அருகில் காட்டப்படுள்ள காவற்கல்லானது,



1. அனுராதபுரக் கலைஞரின் ஆக்கபூர்வத் தன்மையை எடுத்துக் காட்டும் பெறுமதி வாய்ந்த படைப்பாகும்.
2. செதுக்கல் கலையின் பல்வகைமையை எண்ணக்கரு ரீதியாக எடுத்துக் காட்டும் ஆக்கமாகும்.
3. நாகராஜரையும் ஏனைய சில குறியீடுகளையும் கொண்டமைந்த ஒரு படைப்பாகும்.
4. காவற்கல் பற்றிய எண்ணக்கருவை வெளிக்காட்டும் அனுராதபுர கால மிகச்சிறந்த காவற்கல் ஆகும்.
5. வரையறுக்கப்பட்ட தளத்தில் பல்வேறு விடயங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பலகைச் செதுக்கலாகும்.

(…………..)

35) அருகில் காட்டப்படுள்ள மரச் சட்டகச் செதுக்கலானது,



1. இரண்டு மனித உருவங்களைச் சிறப்பாக ஒருங்கிணைத்து ஆக்கப் பட்டதொரு படைப்பாகும்.
2. மல்யுத்த வீரர்களை எடுத்துக் காட்டும் பெறுமதிமிக்கதொரு செதுக்கலாகும்.
3. பனாவிட்டிய அம்பலத்தில் காணக்கிடைக்கும் மல்யுத்த வீரர்களின் வெளிப்பாட்டுச் செதுக்கலாகும்.
4. வாழ்க்கை நிகழ்வுகளை வெளிப்படுத்தும் எம்பக்க தேவாலயச் செதுக்கலாகும்.
5. மல்யுத்த வீரர்கள் ஆக்கபூர்வமாகச் செதுக்கப்பட்டுள்ள எம்பக்க தேவாலயப் படைப்பாகும்.

(…………..)

➢ **36 தொடக்கம் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகச் சரியான விடையை பின்வரும் சித்திரத்தினைப் பயன்படுத்தி தெரிவு செய்க.**



36) இந்த ஓவியத்தைக் காணக்கிடைப்பது,
1. லங்காதிலக்க விகாரையின் ஓவியங்களிலாகும்.
2. தெகல்தொருவ விகாரையின் விமான ஓவியங்களிலாகும்.
3. மெதவல விகாரையின் ஓவியங்களிலாகும்.
4. தம்புள்ளை விகாரையின் விமான ஓவியங்களிலாகும்.
5. தெகல்தொருவ விகாரையின் சுவர் ஓவியங்களிலாகும்.

37) இவ்விகாரையின் ஓவியங்கள் வரையப்பட்டது,
1. ஹிரியாலே ஓவியரான நைந்தே உள்ளிட்ட குழுவினரால் ஆகும்.
2. கொஸ்வத்தை ஓவியரான நைந்தே உள்ளிட்ட குழுவினரால் ஆகும்.
3. மாத்தளை நீலகம் ஓவியப் பரம்பரை ஓவியர்களால் ஆகும்.
4. தெவரகம்பள சில்வத் அவர்களின் தலைமையில் ஆகும்.
5. தேவேந்திர மூலாச்சாரியாரின் தலைமையில் ஆகும்.

38) இந்த ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது,
1. புத்தபகவான் இச்சைகளை அடக்கி முத்தியடைந்த சந்தர்ப்பமாகும்.
2. ஐந்து வகையான தபசிகளுக்கு தர்மம் போதிக்கப்பட்ட சந்தர்ப்பமாகும்.
3. இருபத்து நான்கு வகையான போதனைகளாகும்.
4. புத்தபகவான் தேவலோகத்தில் பிறந்திருந்த தன் தாய்க்கு தர்மம் போதித்த சந்தர்ப்பமாகும்.
5. புத்தபகவான் கபிலவஸ்து புரத்துக்கு வருகை தந்த சந்தர்ப்பமாகும்.

39) இந்த ஓவிய நிர்மாணத்தின் போது கலைஞர்,

1. முப்பரிமாண இயல்புகள் காட்டப்படும் விதத்தில் வர்ணங்களையும் கோடுகளையும் பயன்படுத்தியுள்ளார்.
2. ஒத்த வர்ணங்களையும் உயிரூட்டமான கோடுகளையும் பயன்படுத்தியுள்ளார்.
3. முப்பரிமாண இயல்புகள் காட்டப்படும் விதத்தில் கோடுகளின் மூலம் வடிவங்களைக் கட்டி யெழுப்பியுள்ளனர்.
4. இருண்ட வர்ணங்களையும் மெல்லிய கோடுகளையும் பயன்படுத்தியுள்ளார்.
5. இருபரிமான வர்ணங்களையும் கோடுகளையும் மரபு ரீதியான பண்புகள் வெளிப்படும் விதத்தில் பயன்படுத்தியுள்ளார்.

40) இந்த ஓவியத்தினால் வெளிப்படுத்தப்படுவது,

1. உணர்ச்சிபூர்வமான வெளிப்பாட்டுத் தோற்ற இயல்புகளின் மூலம் அதன் தரம் பேணப்பட்டுள்ளது.
2. அதிகளவிலான இடத்தைப் பிடித்துள்ள புத்தரின் உருவத்தினால் அதன் வெளிப்பாட்டுத் தன்மை பாதிக்கப்பட்டுள்ளது.
3. புத்தரின் உருவத்தைக் காட்டுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகளவான இடத்தினால் புத்தர் மீதான பார்வை அதிகரிக்கப்படுகிறது.
4. தொனிப்பொருளை மனங்கவரும் விதத்தில் காட்டியுள்ளதன் மூலம் பக்தி சிரத்தையுடன் காருண்யமும் உணரப்படுகிறது.
5. மனித உருவங்களின் தொகுதி காரணமாக பார்வையாளரின் மனங்கள் ஓவியத்தின் பால் ஈர்க்கப்படுகிறது.

agaram.lk

## பகுதி II

**'அ'பகுதியில் இருந்து இரண்டு வினாக்களுக்கும் 'ஆ' 'இ'பகுதியிலிருந்து தலா ஒவ்வொரு வினா வீதம் தெரிவு செய்து மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக.**

### பகுதி 'அ'

**(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் ~ இலங்கை)**

**1) கண்டிய காலப்பகுதியில் மலையக, தாழ்நிலம் என இரு வேறுபட்ட சித்திரப் பராம்பரியம் வளர்ச்சி பெற்றது.**

i. தாழ்நில சித்திரப் பராம்பரியம் காணப்படும் இரு விகாரைகளின் பெயரினைக் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii. தெகல்தொறுவ விகாரை ஓவியங்களை சுருக்கமாக மதிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

iii. முல்கிரிகலை விகாரையில் வரையப்பட்டுள்ள தெளபத்த ஜாதகதை ஓவியத்தில் காணப்படும் தாழ்நில சித்திர மரபின் பண்புகளை விமர்சிக்குக. *(8 புள்ளிகள்)*

**2) மத்திய காலப்பகுதி மிக உன்னதமான கலைப்படைப்புகளை விட்டுக் சென்றுள்ளது.**

i. எம்பக்கே தேவாலய சிற்பங்கள் இரண்டு தருக. *(2 புள்ளிகள்)*

ii. கடலாதெனிய விகாரையில் காணப்படும் விஜய உத்பாய அமைப்பு பற்றி சுருக்கமாக குறிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

iii. யாப்பகூவ அரண்மனை சிதைவுகளில் காணப்படும் கலைப்படைப்புகளை சுருக்கமாக குறிப்பிடுக. *(8 புள்ளிகள்)*

**3) கொழும்புக் கால ஓவியக்கலை அதி உன்னதமான கலைப் பண்புகளை வெளிப்படுத்தியுள்ளது.**

i. 43ஆம் குழுவைச் சேர்ந்த கலைஞர்கள் **இருவரைப்** பெயரிடுக. *(2 புள்ளிகள்)*

ii. களனி விகாரையில் வரையப்பட்டுள்ள புத்தபெருமான் மகியங்கனைக்கு வருகை தரல் அல்லது புனித பாதங்களைப் பதித்தல் ஓவியத்தைப் பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்க. *(5 புள்ளிகள்)*

iii. கோதமி விகாரையிலும் பெல்லன்வில விகாரையிலும் காணப்படும் 'இயமனின் தோல்வி' என்ற ஓவியங்கள் பற்றி ஒப்பீட்டு ரீதியாகப் பகுப்பாய்வு செய்க. *(8 புள்ளிகள்)*

### பகுதி 'ஆ'

**(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)**

**4) கி.பி முதலாம் நூற்றாண்டில் காந்தார தேசத்தில் பரவிய பௌத்த கலை மரபானது கீழைத்தேய மேலைத்தேய பண்பாட்டுக்களின் ஒரு கலப்பாகும்.**

i. கனிஷ்க மன்னனின் தங்க நாணயத்தில் காணப்பட்ட வடிவங்கள் இரண்டும் எவை? *(2 புள்ளிகள்)*

ii. காந்தாரக் கலைஞர் வடிவமைக்கப்பட்ட "துஸ்தரக் கிரியாவ" நிலைக் காட்டும் புத்தர்சிலையை பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்க. *(5 புள்ளிகள்)*

iii. காந்தாரக் கலை மரபின் சமகாலக் கலைமரைபான மதுராக கலை மரபிலும் புத்தர் சிலை உருவாக்கப்பட்டது. இருப்பினும் மதுரா புத்தர் சிலையில் காந்தார சிலைகளைவிட ஆத்மீக குணவியல்புகள் அதிகமாக காணப்படுகிறன்றது. உதாரணத்துடன் விளக்குக. *(8 புள்ளிகள்)*

agaram.lk

**5) பல்லவக் கலை நிர்மாணிப்புகள் பாரதத்தின் இந்து சமயக்கலை நிர்மாணிப்புக்களிடையே விசேஷ இடத்தைப் பெற்றுள்ளன.**

i. பல்லவ கட்டிடங்களின் பிரதான இரு பிரிவுகளையும் குறிப்பிடுக. *(2 புள்ளிகள்)*

ii. பஞ்சபாண்டவர் இரதக்கோயில் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

iii. இந்து சமய புராணக் கதையில் வருகின்ற செய்திகள் பல்லவ கலைஞரின் தலைப்புகளாக அமைந்தன. கடற்கரையின் அண்மையில் உள்ள பாறைச் செதுக்கலின் பொருட்டு, இது போன்ற தலைப்பைத் தெரிந்து பயன்படுத்தி இருக்கும் சந்தர்ப்பத்தை இனங்கண்டு அது பற்றி விமர்சனம் செய்க. *(8 புள்ளிகள்)*

## பகுதி 'இ'

### (சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**6) கிரேக்க கலைப்பாணியைப் பின்பற்றிய உரோமக் கலைஞர்கள், பிற்காலத்தில் கிரேக்கர்களை மிஞ்சியவர்களாக கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றில் அதியுன்னத திறமையை வெளிப்படுத்தினர்.**

i. உரோமக் கலைஞர்களின் கட்டடக்கலை நிர்மாணிப்புகள் **இரண்டினைத்** பெயரிடுக. *(2 புள்ளிகள்)*

ii. மேலே (i) இல் நீர் பெயரிட்ட ஏதேனும் ஒன்றின் நிர்மாண மாதிரி தொடர்பாக சுருக்கமான அறிமுகம் ஒன்றை மேற்கொள்க. *(5 புள்ளிகள்)*

iii. உரோமர்களின் தலைச்சிற்பங்கள் இரண்டினை அறிமுகப்படுத்தி, அவை உயர்தரமான நிர்மாணிப்புகளாக மதிப்பீட்டுக்குட்படுகின்றமைக்கான காரணங்களை ஆராய்க.*(8 புள்ளிகள்)*

**7) 19ஆம் நூற்றாண்டில் சுதந்திர கலைஞர்களில் புதிய தேடல் புதுப்புது ஓவியப் பாணிகளை உலகிற்கு அறிமுகப்படுத்தியது.**

i. பின்மனப்பதிவுவாத ஓவியர்கள் இருவரினைப் பெயரிடுக. *(2 புள்ளிகள்)*

ii. மேரி கசற்றின் (Mary Cassat) ஸ்தானம் (The Bath) ஓவியத்தை சுருக்கமாக மதிப்பிடுக. *(5 புள்ளிகள்)*

iii. "பிக்காசோவின் அவிக்நோவின் யுவதிகள் மற்றும் குவர்ணிக்கா ஓவியங்கள் கியூபிசத்தில் இரு மாதிரிகளை காட்டுகிறது." இக் கூற்றினை விமர்சிக்குக. *(8 புள்ளிகள்)*

agaram.lk

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
Term Examination, March - 2019

FWC

| தரம்:- 13 (2019) | சித்திரக்கலை III | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**கவனிக்க :**

- ✶ **நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.**
- ✶ **உங்கள் சுட்டெண்ணையும் உரிய வினா இலக்கத்தையும் விடைத்தாளின் பிற்பக்கத்தில் உள்ள கோட்டில் தெளிவாக எழுதுக.**
- ✶ **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும் போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.**
- ✶ **வர்ணந் தீட்டுவதற்கு நீர்வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக்கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)**
- ✶ **வரைவதற்கு வெள்ளைத் தாளும் தேவையானவர்களுக்குத் திசுத் தாளும் வழங்கப்படும்.**

"அ", "ஆ", "இ" பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.

### பகுதி "அ"
**சித்திர ஒழுங்கமைப்பு**

01) இயற்கையான சுழலில் தியானத்தில் ஈடுபட்டிருக்கும் துறவிகள்

02) சரணாலயப் பூமியில் மிருகங்களைப் பார்வையிடும் மாணவர்கள்.

03) மீன் பிடித்து எடுத்துவரும் மீனவர்கள் கரைக்கு திரும்புதல்.

agaram.lk

### பகுதி "ஆ"
**அலங்கார ஆக்கம்**

04) "9x9" அளவுடைய அலரிப் பூக்களையும் இலைகளையும் கொண்ட வடிவத்தை பயன்படுத்தி 36 அங்குல சீத்தைத் துணி ஒன்றுக்குப் பொருத்தமான பரவல் அலங்காரப் பகுதி ஒன்றை நிர்மாணிக்குக.

05) நவீன பாணியிலான பிராணியொன்றின் வடிவத்தைக் கொண்டு பத்திக் முறையில் வர்ணமிடுவதற்குப் பொருத்தமான $2 \times 3$ அடி அளவிலான சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்குக.

06) "10 X16" அங்குல அளவுடையதான சேலை முந்தானைக்குப் பொருத்தமான அலங்காரம் ஒன்றைப் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரங்களிலிருந்து நிர்மாணிக்குக.

### பகுதி "இ"
**கிறபிக் சித்திரம்**

07) "நாம் வளர்ப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற தலைப்பில் வர்ண போஸ்ரர் ஒன்றை நிர்மாணிக்குக.

08) பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்றின் போது விநியோகிக்கப்படுகின்ற கையேட்டின் முன் பக்கத்தை அலங்கரிப்பதற்கான கிறபிக் சித்திரமொன்றை நிர்மாணிக்குக.

09) நாட்டின் பிரசித்தி பெற்ற கலைஞர் ஒருவரின் பிறந்தநாள் வாழ்த்துக்கான வாழ்த்துமடல் ஒன்றை நிர்மாணிக்குக.

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

**தவணைப் பரீட்சை, மார்ச் - 2019**

## Term Examination, March - 2019

| தரம்:- 13 (2019) | சித்திரக்கலை II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

- ✶ **உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.**
- ✶ **விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையயளிக்கும் போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால், அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.**

**இயற்கைக் கற்றலும் அசையாப் பொருள்கூட்டமும்**

❖ **பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன்கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணந் தீட்டுக.**

- ✶ கடதாசிப் பரப்பினைப் பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- ✶ பொருள்களினதும் செடியினதும் இயல்பு, வெளிப்புறத் தன்மை, பரிமாணம், கண்மட்டம், முப்பரிமாண இயல்பு, தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- ✶ பொருள்தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி, இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணந் தீட்டுக.
- ✶ வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன் படுத்துக.
- ✶ பொருள்தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- ✶ நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

agaram.lk

**மேற்பார்வையாளருக்குரியது.**

**நிலைப்பொருட்கூட்ட ஒழுங்கு**



agaram.lk

வைக்கப்பட வேண்டிய பொருட்கள்

- புத்தகம் இரண்டு (பெரிது, சிறிது)
- பப்பாசிப்பழம்
- துணி
- சிறிய பந்து
- பேணியுடன் குறோட்டன்

மேற்பார்வையாளருக்குரியது.

நிலைப்பொருட்கூட்ட ஒழுங்கு



agaram.lk

வைக்கப்பட வேண்டிய பொருட்கள்

- புத்தகம் இரண்டு (பெரிது, சிறிது)
- பப்பாசிப்பழம்
- துணி
- சிறிய பந்து
- பேணியுடன் குறோட்டன்

agaram.lk

**மேற்பார்வையாளருக்குரியது.**

**நிலைப்பொருட்கூட்ட ஒழுங்கு**



agaram.lk

வைக்கப்பட வேண்டிய பொருட்கள்

- புத்தகம் இரண்டு (பெரிது, சிறிது)
- பப்பாசிப்பழம்
- துணி
- சிறிய பந்து
- பேணியுடன் குறோட்டன்